RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2517

OPEN ACCESS

# பண்பாட்டு மாற்றத்தில் தாய் தெய்வ வழிபாடு

**அ. புஷ்பா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயமுத்தூர் - 43, தமிழ்நாடு, இந்தியா

# Mother Goddess Worship in Cultural Change

**A. Pushpa** [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute of Home Science and Higher Education for Women, Coimbatore -43, Tamil Nadu, India

* Corresponding Author: pushpa_tam@avinuty.ac.in

Received: 08-08-2022
Revised: 26-10-2022
Accepted: 06-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Mother Goddess worship plays an important role in bringing about a great change in culture. Women are prioritized in determining relationships, property rights, and marriage. Literature and historical documents confirm this, sculptures and inscriptions have been found in Tamil Nadu to show that Isakhyamman was a female deity during the Jain period. The practice of worshiping them under many names as household deities, ethnic deities, clan deities, village deities, guardian deities, boundary deities, and tribal deities has been going on since then till today.

**Keywords:** Mother Goddess, Sangam Literature, Worship, Relationship

## முன்னுரை

இயற்கை மனிதனை அச்சமூட்டுவதாகவும், வாழ்வின் ஆதாரமாகவும் விளங்கியதால் தொடக்க காலத்தில் இருந்தே மனிதன் இயற்கையைக் கடவுளாக வழிபடத் தொடங்கினான். இவ்வழிபாடே ஆதிவழிபாடாகும். தெய்வத்தை ஒரு ஆற்றலாக கருதிய மக்கள் சமூகத்தின் தேவைகள் சார்ந்து வடிவங்களும் குணங்களும் கொண்ட இறைவன் உருவங்களைப் படைத்தனர். பெண்ணே குடும்பத்தைக் காப்பவளாக, பொருளீட்டுபவளாக, மகவினை பெற்றுக் கொடுப்பவளாக விளங்கியதால் பண்டைய இந்து சமயம், கிரேக்கர் பின்பற்றிய சமயம் ஆகியவற்றில் பெண் கடவுளரை வழிபடும் முறை இருந்துள்ளது.

## திராவிடநாகரிகமும் பெண் தெய்வ வழிபாடும்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகின் பல இடங்களில் சக்தி வழிபாடு பரவியிருந்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிந்துச் சமவெளி நாகரிகத்திலும் சக்தி வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்ததை அகழ்வாராய்ச்சியில் அறிய முடிகின்றது. ஹரப்பா, மொகஞ்சதாரோ முதலிய இடங்களில் காணப்பட்ட முத்திரைகள், சிலைகள், தாய்த் தெய்வ வழிபாட்டை வெளிபடுத்துகிறது, எகிப்தில் ‘இசில்’ என்ற பெண் தெய்வமும், சின்னாசியாவில் ‘சிபிஸ்’ என்ற பெண் தெய்வமும் சிரியாவில் ‘அஸ்தாத்’ என்ற பெண் தெய்வமும் நதிக்கரை நாகரிகம் தாய் வழி சமூக அமைப்பில் உள்ளது. ஆரியரின் வருகைக்கு முன்பிருந்த திராவிட நாகரிகம் தாய் வழி வழிபாட்டைக்

கொண்டிருந்தன. உறவு முறை, சொத்துரிமை, ஆட்சியுரிமை, அதிகாரம், மணமுறை இவற்றைக் கொண்டு தாய்த்தெய்வ வழிபாட்படை அறியமுடிகின்றது.

## தாய்மையின் மகத்துவம்

தாய்நாடு, தாய் மண், தாய்மொழி, ஆறுகள், நதிகள் என்று பெண்மையின் சாயலாக மதிக்கப்படுகின்றன. தாய்மையைப் போற்றும் விதமாக பெண் தெய்வ வழிபாடு அமைகிறது. ஊரை காத்தலினால் ஊர் தெய்வம் என்றும் குலத்தைக் காக்க உயிihத் தியாகம் செய்தவர்களைக் குலதெய்வம் என்றும் ஊருக்குக் காவலாக இருக்கும் தெய்வத்தைக் காவல் தெய்வம் என்றும் பல நிலைகளில் வழிபடுவதோடு செவ்வாடை, மஞ்சளாடைக் கட்டிக் கொண்டு அரிவாள், கத்தி, வேல், குதிரை உருவம் என நேர்த்திக்கடன்கள் செலுத்தி நாட்டுப்புற மக்கள் தங்களுக்கு உகந்த நேரங்களில் வழிபாடுகள் செய்யும் நிலையை அறிய முடிகிறது. கிராமிய தெய்வங்கள் இனம், சாதி என்று பாராமல் அனைவராலும் வழங்கப்படும் தெய்வமாக பிராமணர் அல்லாத பூசாரிகளால் பெரும்பாலும் வழிபாட்டுச் சடங்குகள் செய்யப்படுவதாகவும் ஆடி, சித்திரை, வைகாசி மாதங்களில் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

## மகாபாரதத்தில் தாய் தெய்வ வழிபாடு

மகாபாரதத்தில் துர்க்கையை இரண்டு இடங்களில் வழிபடுகின்றனர். பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் முடிந்து ஓராண்டு அஞ்ஞான வாசத்தை முடித்து விராட நாட்டுக்குள்ளே புகும் வேளையில் தரும புத்திரர் துர்க்கையை வேண்டுகின்றனர். பகவத்கீதை உபதேசிக்கபடும் முன் யுத்த களத்தில் தங்களது வெற்றியை வேண்டி அர்ச்சுணன் துர்க்கையை வேண்டுகின்றான்.

## இலக்கியங்களில் பெண் தெய்வ வழிபாடு

சங்க காலத் தமிழ் மக்கள் வெற்றித் தெய்வத்தைக் 'கொற்றவை' எனப் போற்றினர். பாபிலோனியர் 'அனாட்' என்றும், எகிப்தியர்கள் 'ஹாதா ரெக்மேட்' என்றும் அழைத்தனர். சங்க காலத் தமிழ் மக்களுடைய வாழ்க்கையை நாம் ஆராய்ந்தால் கொற்றவை வழிபாடே பழந்தழருடைய புராதன வழிபாடாகும். கொற்றவை 'பழையோள்' 'காடுகிழாள்' 'கானமர் செல்வி' என்றெல்லாம் அழைக்கப்படுகின்றாள். நடுகல் வழிபாடும், வீர வணக்கமும் கொற்றவை வழிபாட்டோடு தொடர்புடையது.

"வெற்றி வேல் போர்க் கொற்றவை சிறுவ" என்றும்,

"இழையணி சிறப்பிற் பழையோள் குழவி"

என்றும் பாடுகின்றது (Nagarasan, 2004).

"பைம்பூண் சேய் பயந்த மாமோட்டுத்

துணங்கையஞ் செல்வி"

என்று விளக்குகின்றது (Nagarasan, 2004).

சிலப்பதிகாரத்தில் தமிழருடைய தாய் தெய்வமாம் கொற்றவையை,

"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்

பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி

வெற்றி வேற் தடக்கைக் கொற்றவை அல்லள்"

என வாயில் காவலன் பாண்டிய மன்னனிடம் கூறுகின்றான் (Puliyur Kesigan, 1958).

"ஓங்கு புகழ் கானமர் செல்வி" (Seyapal, 2004)

"கொற்றவை கோலம் கொண்டோர் பெண்" (Nagarasan, 2004)

என்று தாய் தெய்வ வழிபாட்டை முன் வைக்கின்றன.

## சப்த கன்னியர் வழிபாடு

ஹரப்பாவிலிருந்த முத்திரைகளுள் ஏழு பெண் உருவங்களும் தாய் வழிபாட்டு சான்றுகளாகும். சோழர் கால காட்டூர் கல்வெட்டு சப்தமாதர்களுக்குத் தனிக்கோயில் அமைக்கப்பட்ட வரலாற்றைக் குறிப்பிடுகின்றது. சப்தகன்னியரைத் தாயாகவும், கன்னியாகவும், கற்புடை மாதாகவும் வழிப்பட்டனர். இவர்களை 'நாச்சிமார்' என்றும் அழைக்கின்றனர். பிராம்மி, வைஷ்ணவி, கவுமாரி, வராகி, இந்திராணி மகேஸ்வரி, சாமுண்டி என்று கூறுவர். வானத்தில் தோன்றும் விண்மீன் தொகுதிக்கு 'சப்தரிஷி மண்டலம்' என்றும் கிழமை ஏழு என்றும் 'சரிகமபதநி' சுவரங்கள் ஏழு என்பதால் ஒவ்வொரு சக்திக்கும் பெயரும் எழுத்தும் ஏழுக்குள் அடக்கப்பட்டுள்ளது. ராஜசிம்மப் பல்லவன் காலத்தில் சப்தகன்னியர் சிற்பங்களிலும் பாண்டியர் குடைவரைக் கோயில்களிலும் சோழர்கள் காலத்திலும் தனிச் சிறப்பு பெற்றிருந்தது.

## தாய் தெய்வங்கள்

'சாக்தம்' என்னும் பிரிவினர் சக்தியை மட்டுமே வழிபடுகின்றனர். பெண்களைத் தாய்மையின் வடிவமாகவும் வளமையின் குறியீடாகவும் கருதியதால் பெண் தெய்வ வழிபாடு உருவாகியது. பெரும்பாலான சிறு தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வ வழிபாட்டைப் பரவலாகக் காண முடிகின்றது. மண்ணுயிர்களை வாழ வைக்கும் மழையே மாரியம்மன் என்றும் காளியம்மன், முத்தாலம்மன், சீலைக்காரியம்மன், நாச்சியம்மன், பேச்சியம்மன், கண்டியம்மன், திரௌபதியம்மன், வீருசின்னம்மாள், உச்சிமாகாளி, சோலையம்மன், பேச்சியம்மன் இசக்கியம்மன், ஜக்கம்மா, மந்தையம்மன், மாசாணியம்மன் போன்றவை தாய்த் தெய்வங்களாக வணங்கப்படுகின்றன. கங்கை, காவிரி கோதாவரி யமுனா, சரஸ்வதி என்று நதிகளையும் பெண்களை மையப்படுத்தியே அழைத்தனர்.

## இயக்கி

மாதரி ஆயர்சேரியிலிருந்து மூதூரில் இருக்கும் தெய்வமாகிய இயக்கிக்குப் பாற்சோறு படைத்துவிட்டு வந்து கொண்டிருந்தாள் என்பதன் வழி

"புறஞ்சிறற மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்

பால்மடை கொடுத்துப் பண்பின் பெயர்வோன்"

இயக்கி என்ற தெய்வம் வழிபாட்டில் இருந்ததை அறிய முடிகிறது (Puliyur Kesigan, 1958).

## காடுறை தெய்வம் காளி

பாணனும் பாடினியும் காட்டு வழி செல்கையில் பலி கொடுத்து காடுறை தெய்வமாகிய காளியை வழிபட்டு சென்றனர் என்பதை

"பராவரு மரபிற் கடவுட் காணிற்

தொழா அநர் கழியின் அல்லகு வறிகு"

என்ற பாடல் எடுத்துரைக்கிறது (Nagarasan, 2004).

கோயிலைக் கண்டால் கடவுளைத் தொழுது செல்லுங்கள் என்று ஒரு பாணன் மற்றொரு பாணனுக்கு எடுத்துக் கூறுவதாக அமைவதன் மூலம் காடுறை தெய்வமாகிய காளி வழிபடப்பட்டமை தெரிகிறது. இந்த காளியானவள் ஊருக்கு வெளியே அச்சம் தரும் உருவத்தோடு நான்கு மூன்று ஊர்களுக்கு பொதுவாக ஊரின் எல்லையில் பார்ப்பவர் நடுங்கும்படியாக பாவம் செய்பவர்கள் அஞ்சும் வண்ணமாக காட்சி கொடுப்பவள். இவளுக்கு ஆடு கோழி போன்ற உயிர் பலிகள் வழங்குவது வழக்கம் அக்கால பாலை நில தெய்வமாகிய கொற்றவையே காளியாக காட்சியளிக்கிறாள்.

## கண்ணகி

பாண்டிய நாட்டை தீக்கிரையாக்கி சேர நாட்டிற்குப் புறப்பட்டு கொடுங்கலூரில் பத்தினி தெய்வமாகப் பகவதி அம்மனாக கண்ணகி வழிபடப்பட்டு வருகிறாள்.

## மதகு காத்த அம்மன்

மகேந்திரவாடியில் மதகு காத்த அம்மன் என்னும் கிராம தேவதை வணங்கப்பட்டு வருகிறது. மதகை காப்பதன் பொருட்டு தன் உயிரை விட்ட பெண்ணின் நினைவாக நினைவுக்கல் வைத்து வேலூர் மாவட்டத்தில் வணங்கப்பட்டு வருவதைப் அறிய முடிகிறது.

## கன்னித் தெய்வங்கள்

கன்னிப் பெண்கள் விபத்திலோ, கொலை செய்யப்பட்டோ தற்கொலை செய்து கொண்டோ இறக்கும் பொழுது அந்தப் பெண்ணின் குடும்பத்தினர் அவளைக் கன்னித் தெய்வமாக வணங்கினர். ஆணாதிக்கம் நிறைந்த காலக்கட்டம் அரசர்களும், ஜமீன்தார்களும், பண்ணையார்களும், வாழ்ந்த காலத்தில் பெண்ணின் அனுமதியோ, பெற்றோரின் அனுமதியோ இன்றி துன்புறுத்தி கொலை செய்துள்ளனர். மானம், அவமானத்திற்கு அஞ்சி குடும்பத்தினரே தங்கள் வீட்டுப் பெண்களைக் கொன்றுள்ளனர் அவர்களின் ஆத்மாவை சாந்திபடுத்த வழிபாடு செய்துள்ளனர். சந்ததியினரே கன்னித் தெய்வத்தைக் குல தெய்வமாக வணங்கி வருகின்றனர்.

## பள்ளிப்படை

குழந்தை பெற்று இளவயதில் இறந்து போன பெண்களும் குடும்ப தெய்வங்களானார்கள் அவர்களை மாலையம்மன் என்று வழிபடுகின்றனர். அரசனின்; மனைவி மங்கலப் பெண்ணாக இறந்திருந்தால் பள்ளிப்படைக் கோயில் எழுப்பியிருக்கிறார்கள். சமயபுரம் மாரியம்மன் கோவில் சோழப் பெருந்தேவி ஒருவர் அம்மை நோய் கண்டு இறந்த பின் எழுப்பப்பட்ட 'பள்ளிப்படை' என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## கிறிஸ்தவ மதத்தில் தாய் தெய்வ வழிபாட்டுச்சாயல்

இந்து சமயத்தைப் போலவே கிறிஸ்துவ சமயத்திலும் பல உட்பிரிவுகள் உள்ளன. ஆதிகாலம் தொட்டு மக்களால் பின்பற்றப்படும் கத்தோலிக்க முறையை மார்டின் லூதர் மாற்றியமைத்து புதிய கிறிஸ்த்தவ கிளையை உருவாக்கினாலும் கூட அன்னை மரியாளை வழிபாட்டுக்குரிய கருப்பொருளாகக் கொண்டு அன்னை வழிபாடு மிகப்பழைய காலத்தில் இருந்தே கிரேக்க ரோமானிய மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து இருந்துள்ளது. கத்தோலிக்க மதப் பிரிவினரின் ஜீவ நாடியே சிலை வழிபாடு தான் என்பதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

காலந்தோறும் பெண் பல பரிமாணங்களைப் பெற்றுள்ளாள் பொருளீட்டுபவளாக, குலம் காப்பவளாக, தலைமுறையை உருவாக்குபவளாக இருந்து ஆணாதிக்கச் சமூகத்தின் இன்னல்களுக்கு

ஆளாக்கப்பட்டு கன்னி தெய்வங்களாகவும் குடும்ப தெய்வங்களாகவும் வடிவெடுத்துள்ளாள். நாடு, நதி மற்றும் ஊரின் பெயராக, பெண்களின் பெயர்கள் அமைந்துள்ளன. தாய் வழி மரபு தந்தை வழி மரபாகி அன்னையாய் பார்த்தப் பெண்ணை அக்னி கொண்டு எரித்து பொசுக்கியது. தற்போது சற்று நிதானிக்கிறது. சமூகம் சரிசமமான மதிப்பைப் பெண்ணிற்கு வழங்கி போற்ற வேண்டும் என்பதனையே தாய்த் தெய்வ வழிபாடு உணர்த்துகின்றது. ஒரு உயிரை படைக்கும் சக்தி பெண்களுக்கு உண்டு தன் இனத்தை விருத்தி செய்து உலக இயக்கத்திற்கு வழி வகுப்பவள் அவளே என்பதால் பெண் முன்னிலைப் படுத்தப்பட்டாள். பெருங்கற்கால காலகட்டத்தில் தாய் தெய்வ வழிபாடு இருந்தமைக்கு ஆதிச்சநல்லூரில் கிடைத்த உலோகத்தால் ஆன தாய் தெய்வ உருவமே சான்றாக அமைகிறது. சங்க கால தெய்வமாக கொற்றவை விளங்கினாள். சமணர்கள் காலத்தில் இயக்கியர் என்று அழைக்கப்படும் இசக்கியம்மன் கோயில்களில் தீர்த்தங்கரர் ஆலயங்களுக்கு அருகே காவல் தெய்வமாக வைக்கப்பட்டுள்ளன. கன்னிமார் தெய்வங்களாகப் பல்லவர் காலத்தில் போற்றப்பட்டனர் தவ்வைத் தாய் வழிபாடு இருந்ததாகவும் சுட்டப்படுகிறது. சோழர்கள் காலத்தில் பரிவார தெய்வங்களாக சப்த கன்னியர் போற்றப்பட்டனர். மனித சக்தி மகத்துவம் வாய்ந்தது அதில் ஆணும் பெண்ணும் சமம் பெண்ணை அடிமையாக்கி போகத்திற்குரியவளாக சித்தரித்து உதாசீனப்படுத்தி கீழ் நிலைக்குத் தள்ளிய காலகட்டமும் நாம் அறிந்ததே. தாழ்நிலை அடையாமல் எக்காலத்தும் சமநிலையோடு சென்றால் மட்டுமே ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும். உடலில் வலிமை கொண்ட ஆண் சமுதாயம் மனதில் பன்மடங்கு வலிமை கொண்ட பெண் சமுதாயத்தைப் பேணிப் பாதுகாத்தால் நல்லதொரு சமுதாயமாக உருவாக முடியும்.

## References


Nagarasan, V. (2004) Pathupattu, New Century Book House, Chennai, India

Puliyur Kesigan, (1958) Silapathikaram, Paari Nilayam, Chennai, India

Seyapal, R. (2004) Agananuru, New Century Book House, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License